## மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

## அசல் வழக்கு எண்.88/2025

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திகேயன் | தந்தை பெயர் | : | ராஜா |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 20.11.2025

**P.W. : 1**

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

நான் வாதி ஆவேன். எனது முதல்விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். 06.03.2014 அன்று கரூர் வைஸ்யா வங்கி தில்லைநகர் கிளை எனக்கு வழங்கிய கடன் அனுமதி கடிதம் உண்மைநகல் **வாசாஆ.1** ஆகும். 07.03.2014 தேதியில் மேற்படி வங்கிக்கு பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த ஆவண வைப்பு அடமான கடன்

ஆவணத்தின் பதிவு நகல் **வாசாஆ.2** ஆகும். பால்பண்ணை தொடர்பான திட்ட அறிக்கை உண்மை நகல் **வாசாஆ.3** ஆகும். 25.06.2010 தேதியில் எனது பால்பண்ணை தொடர்பாக இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் திருச்சி பதிப்பில் வெளியான செய்தி உண்மைநகல் **வாசாஆ.4** ஆகும். மின் கட்டண ரசீது **வாசாஆ.5** ஆகும். கோவை கிளாசிக் இன்டஸ்ட்ரீ வழங்கிய டேக்ஸ் இன்வாய்ஸ்கள் **வாசாஆ.6** ஆகும். இந்த நீதிமன்றத்தில் என் தாயார் பரிமளா தாக்கல் செய்த அவ.எண்.292/2020 வழக்கின் வழக்குரை நகல் **வாசாஆ.7** ஆகும். 19.01.2021 அன்று ஸ்ரீரங்கம் காவல்நிலையத்தில் நானும், எனது தாயாரும் கொடுத்த புகார் மனுவின் அலுவலக நகல் **வாசாஆ.8** ஆகும். அதற்கு அவர்கள் வழங்கிய மனு ரசீது எண்.44/2021 **வாசாஆ.9** ஆகும். (வாசாஆ.5, 6 ஆகியவை பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது). தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**(வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.